


10.08.2024

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களை வான்வழியாக இன்று நேரில் செய்தார்.

2 வங்கி சீர்த்திருத்த மசோதாவில் கூட்டுறவு துறை சார்ந்த முக்கிய சீர்த்திருத்தங்கள் இடம் பெற்றுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 6 ஆயிரத்து 915 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

4. நாடுமுழுவதும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத்தேர்வு திட்டமிட்டபடி நாளை நடைபெறுகிறது.

5. பாரீஸ் ஒலிம்பிக் 76 கிலோ மகளிர் மல்யுத்த போட்டியில் இந்தியாவின் ரீத்திகா ஹுடா இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களை வான்வழியாக இன்று நேரில் பார்வையிட்டார்.

இந்திய ராணுவப்படையின் ஹெலிகாப்டர் மூலம் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட புன்ச்சிரிவட்டம், முண்டக்காய், அட்டமலா பகுதிகளை அவர் ஆய்வுசெய்தார்.

தொடர்ந்து நிலச்சரிவால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட சூரமலா பகுதியை சாலை மார்க்கமாக அவர் ஆய்வுசெய்தார்.

சூரமலாவில் இருவாணிபுழா ஆற்றின் குறுக்கே கட்டமைக்கப்பட்ட 190 அடி நீள பெய்லி பாலத்தை உருவாக்கிய பாதுகாப்பு மற்றும் மீட்புப்படை வீரர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

பிரதமருடன் கேரள மாநில ஆளுநர் திரு. ஆரிப் முகமது கான், முதலமைச்சர் திரு. பினராயி விஜயன், மத்திய அமைச்சர் திரு. சுரேஷ் கோபி உள்ளிட்டோர் இருந்தனர்.

சூரமலாவிலிருந்து ஆ.ஐ.ஆ.ளு. மருத்துவமனைக்கு செல்லும் பிரதமர், மேப்பாடி பள்ளி முகாமில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடுகிறார்.

தொடர்ந்து மீட்பு நிவாரணம், மறுசீரமைப்புப் பணிகள் உள்ளிட்டவை தொடர்பாக ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

□□□□□□□

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதித்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டிற்கு பிந்தைய ஆலோசனை கூட்டம் உயரதிகாரிகளுடன் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

மக்களவையில் சில திருத்தங்களுடன் அறிமுகம் செய்யப்பட்ட நிதி மசோதா நிறைவேற்றப் பட்டதை தொடர்ந்து இந்த ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சக்தி காந்ததாஸ் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நெடுநாள் காத்திருப்பிற்கு பின்னர் வங்கி சீர்த்திருத்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்

கூட்டுறவு வங்கித்துறை சார்ந்த முக்கிய ஒழுங்குமுறை மாற்றங்கள் இதில் அடங்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வாடிக்கையாளர்களுக்கு உகந்த சேவை, நியமனதாரர்கள் தங்களது உரிமைகளை கோரி எளிதில் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுக்கும் இம்மசோதா வகை செய்கிறது.

முன்னதாக அமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி வங்கிகள் சட்டத்திருத்த மசோதாவை நேற்று மக்களவையில் தாக்கல் செய்திருந்தார்.

□□□□□□□

திரௌபதி முர்மு

இந்தியா - திமோர் லெஸ்டே நாடுகள், சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு மற்றும் பேரிடர் மீட்பு கட்டமைப்பு உள்ளிட்டவற்றில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

திமோர் லெஸ்டே நாட்டிற்கு அரசுமுறை பயணம் மேற்கொண்ட அவர் அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

மின்னனு தொழில்நுட்ப கட்டுமானம், மருத்துவம், மருந்து துறை, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது

முன்னதாக குடியரசு தலைவருக்கு அந்நாட்டின் உயரிய கவுரவ விருது வழங்கப்பட்டது.

□□□□□□□

பாதுகாப்பு அமைச்சகம்

நாட்டின் பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 6 ஆயிரத்து 915 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவு, மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளால் இது சாத்தியமானதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

□□□□□□□

பிரதாப் ராவ் ஜாதவ்

யானைக்கால் நோயை முற்றிலும் அகற்றுவதற்கான தேசிய தடுப்பு மருந்து வழங்கும் முகாமை மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

கொசுக்கடியால் ஏற்படும் இந்நோயை தடுப்பதில் இந்த தடுப்பு மருந்து முக்கிய பங்காற்றுவதாக அவர் கூறினார்.

நாடுமுழுவதும் 20 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் யானைக்கால் நோய் பரவலாக காணப்படுவதாக எடுத்துரைத்த அவர், இந்த மருந்தை அனைவரும் உட்கொண்டு பயனடைய வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

□□□□□□□

நீட்

நாடுமுழுவதும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத்தேர்வு திட்டமிட்டபடி நாளை நடைபெறுகிறது.

500 நகரங்களில் நடைபெறும் இத்தேர்வில் 4 லட்சத்திற்கும் அதிகமான மாணாக்கர் பங்கேற்கின்றனர்.

முன்னதாக இந்த தேர்வை ஒத்திவைக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமையிலான அமர்வு, தேர்வு ஒத்திவைக்கப்பட்டால் 2 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தில் ஆடீடீளு டீனுளு உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கு நடப்பாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியல் வரும் 19-ம் தேதி வெளியிடப்படும் என மருத்துவ கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

42 ஆயிரத்து 957 மாணாக்கர் விண்ணப்பித்துள்ள நிலையில், வரும் 21-ம் தேதி முதல் கலந்தாய்வு தொடங்குகிறது.

மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 9 ஆயிரத்து 50 ஆடீடீளு இடங்களும், ஆயிரத்து 950 டீனுளு இடங்களும் நிரப்பப்பட உள்ளன.

□□□□□□□

சிங்க தினம்

சர்வதேச சிங்க தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

காட்டு அரசனான சிங்கங்களை பாதுகாப்பது தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழலில் முக்கிய பங்காற்றும் சிங்கங்களை பாதுகாக்கும் ‘சழதநஉவ டுழைெ இயக்கத்தின் கீழ் சிங்கங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து உள்ளதாக மத்திய வனம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

□□□□□□□

மு.பெ.சாமிநாதன்

தமிழகத்தில் ஏழை எளியோர் மகளிர் மாணாக்கர் உட்பட அனைவரின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் அரசு பொருட்காட்சியை தொடங்கி வைத்த அவர், அரசின் நலத்திட்டங்களை, மக்கள் எளிதில் அறிந்து பயன்பெற இப்பொருட்காட்சி வகை செய்வதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. மு.வே.நேரு, அரசின் மக்கள் நலத்திட்டங்களால் ஏராளமானோர் பயனடைந்து வருவதை எடுத்துரைத்தார்.

□□□□□□□

மரக்கன்றுகள்

தமிழகத்தை பசுமை மாநிலமாக மாற்ற அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதனொரு பகுதியாக இடையமேலூர் கிராம ஊராட்சியில் மரக்கன்றுகள் நடும் பணிகள் இன்று தொடங்கின.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

விநாயகர் சிலைகள்

விநாயகர் சதுர்த்தி அடுத்தமாதம் 7-ம் தேதி கொண்டாடப்படும் நிலையில் கள்ளக்குறிச்சியில் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

.. வாய்ஸ் ..

தண்ணீரில் எளிதாக கரையக்கூடிய சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் இங்கு தயாரிக்கப்படும் 3 முதல் 15 அடி வரையிலான விநாயகர் சிலைகளை வாங்க பல்வேறு மாவட்டங்களிலிருந்து முன் பதிவும் நடைபெற்று வருகிறது.

□□□□□□□□

இருவரி

தமிழ்நாட்டில் பொதுவிநியோக திட்ட சிறப்பு குறைதீர்க்கும் முகாம் அனைத்து மாவட்டங்களிலும் இன்று நடைபெற்றது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களுக்கு இதில் விண்ணப்பிக்கப்பட்டது

டிஜிட்டல் மயமாக்கல் தேவைகள் அதிகரித்து வருவதால் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த அரசு அலுவலர்கள் பணியாளர்கள், நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதன் அவசியத்தை ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் வலியுறுத்தி உள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபின இன மக்கள் குழுவாக இணைந்து ஆயத்த ஆடைகள் உற்பத்தி அலகு அமைக்க வரும் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. சரயு தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் மாணாக்கர் இடைநிற்றலை தடுக்க பள்ளி மேலாண்மைக்குழு நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி. சாந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

தலைகவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தும் இருசக்கர வாகன பேரணி உதகையில் இன்று நடைபெற்றது.

சாதிக்க விரும்பும் குழந்தைகளுக்கு மாற்றுத்திறன்கள் தடையில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் ராமேஸ்வரத்திலிருந்து கடலில் நீந்தி 15 மாற்றுத்திறனாளி குழந்தைகள் வேளாங்கன்னி வந்து சேர்ந்தனர்.

மாற்றுத்தினாளிகளின் நலனுக்காக சிறப்பான சேவை புரிந்ததற்காக விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜெயசீலன் வரும் 15-ம் தேதி சென்னையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாநில அரசின் விருதை பெறுகிறார்.

கரூரில் செல்போன் கடை ஒன்றில் இன்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எறிந்து சேதமடைந்தன.

கைப்பேசி பேட்டரி வெடித்ததன் காரணமாக இந்த விபத் நேரிட்டதாக கூறப்படுகிறது.

கரூர் நகர காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அய்யாளம்மன் படித்துறை பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பறவை பூங்கா அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் இன்று ஆய்வுசெய்தார்.

□□□□□□□□

சர்வதேச பின்னலாடை கண்காட்சி

திருப்பூரில் 22-வது சர்வதேச பின்னலாடை கண்காட்சி இன்றுமுதல் 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது.

400-க்கும் மேற்பட்ட அரங்குகள் மற்றும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த பின்னலாடை உற்பத்தி நிறுவனங்கள் இதில் பங்கேற்றுள்ளன

சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து இக்கண்காட்சியில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

□□□□□□□□

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளின் முன்னோட்டமாக வரும் 20-ம் தேதி முதல் வாக்காளர்களின் இருப்பிடங்களுக்கு நேரில் சென்று விவரங்களை சரிபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வரும் அக்டோபர் 18-ம் தேதிவரை வாக்குச்சாவடி அலுவலர்கள் மூலமாக இப்பணிகள் நடைபெறவுள்ளன

இதனைத் தொடர்ந்து அக்டோபர் 29-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

□□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றில் வேகமாறுபாடு காரணமாக ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

கோவை, நீலகிரி, நாமக்கல், திருச்சி, பெரம்பலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் நாளை கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

நாளை ஈரோடு, திருப்பூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், கரூர், அரியலூர், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

□□□□□□□

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் 76 கிலோ மல்யுத்த போட்டியில் இந்தியாவின் ரீத்திகா ஹூடா - ஹங்கேரியின் பெர்னாடெட்டை இன்று எதிர்கொள்கிறார்.

கோல்.்.ப் மகளிர் போட்டியின் இறுதி சுற்று ஆட்டத்தில் இன்று அதிதி தீக்ஷா களமிறங்குகின்றனர்.

இந்தியா இதுவரை 1 வெள்ளி, 5 வெண்கலம் என 6 பதக்கங்களை வென்றுள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.